# கேள்வி:

## ஏன் இறைவன் ஹெய்தியை (Haiti) வெறுக்கின்றான்

### வெறுப்படைந்த கிறுஸ்துவ பிரச்சாரகரின் துன்ப வேதவியல்

நாடுகளுக்கிடையில் ஹெய்தி நிச்சயமாக ஒரு ஜோப் (அய்யூப் அலைஹிஸ்ஸலாம்) தான். வடதுருவத்தில் மிகவும் ஏழ்மையான நாடு இது. மக்கள் தொகையில் பாதிக்கு மேலானோர் ஒரு நாளுக்கு ஒரு டாலரைவிட குறைந்த வருமானத்திலேயே வாழ்கின்றனர். இதன் காடுகளில் 98 விழுக்காடு வெட்டப்பட்டு எரிக்கப்பட்டன. ஹெய்தி சூறாவளிகளால் வெள்ளப்பெருக்கெடுக்கும் தன்மை வாய்ந்தது. 2008- ம் ஆண்டு நான்கு புயல்களால் பல வாரங்கள் தாக்கப்பட்டு பத்து இலட்சம் மக்கள் தமது வீடுகளை இழந்தனர். பல ஆப்பிரிக்க நாடுகளை விட அதிக மோசமான குழந்தைகள் இறப்பு விகிதம் கொண்டது, மேலும் குடிமக்கள் பலவித நோய்களான: வயிற்றுப்போக்கு, ஈரல் அழற்சி, டைபாய்டு காய்ச்சல், டெங்கு காய்ச்சல், மலேரியா, மற்றும் மஞ்சள் காமாலை ஆகியவற்றால் பரவலாக பீடிக்கப்பட்டுள்ளன. இந்த பல்லவி பேரழிவுள்ள ஹெய்தியின் அரசியல் வரலாற்றை சிறிதும் தொட்டதே இல்லை, குறிப்பாக ஃப்ரன்காய்ஸ் (பாபா டாக்) டுவாலியர் (François (Papa Doc) Duvalier என்பவரை. அவர் 1960-ல் 30,000 பேரை சித்திரவதை செய்து படுகொலை செய்தார்.

சென்ற வாரத்தின் பூகம்பத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் இறந்தவிட்டதால், இப்பொழுது அறிஞர்கள் கூறும் இறைவாற்றலின் பிரச்சினையை நம்பிக்கயுள்ள ஒரு அறிவாளி எப்படி பற்றிக்கொள்வான். இறைவன் நல்லவனாக இருந்து, இவ்வுலகத்தில் தலையிடுகின்றான் என்றால், அப்பாவி மக்களை ஏன் அவன் துன்புறுத்துகின்றான்? ஜோப் ( அய்யூப் அலைஹிஸ்ஸலாம்) சொல்லியிருந்திருப்பதைப்போல், இறைவன் ஏன் " வறுமையில் வாடும் மக்களை சூறைக்காற்றால் நொறுக்கி அவர்களின் காயங்களை, காரணமின்றி பல மடங்கு அதிகரிக்கச்செய்வான்? அவர்களை மூச்சு வாங்கவும் விடமாட்டானா?"

'பேட் ராபர்ட்சன்' (Pat Robertson) என்ற ஒரு கிறுஸ்துவ தொலைக்காட்சியின் பிரசாரகனுக்கு, அதன் பதில் மிகவும் சாதாரணமானது: இது ஹெய்தியர்களின் சொந்த குற்றம், ஊகித்துக்கொள்ளக்கூடிய சூனியத்தில் அவர்களுக்குள்ள ஈடுபாடு. சென்ற வார கிரிஸ்துவர் ஒளிபரப்பில் 1791-ம் ஆண்டின் சரித்திரத்தின் அரிய வெற்றிகரமான கிளர்ச்சி, ஹெய்திய புரட்சிக்கு கொண்டு சென்ற நிகழ்ச்சிகளை மறைமுகமாக குறிப்பிட்டான். " போய்ஸ் கேய்மன் ( Bois Caiman) என்ற காட்டில், கிளர்ச்சியாளர்கள் இரத்த சபதத்திற்காக ஒன்றுகூடினர். " காற்று புலம்பிக்கொண்டிருக்கிறது" புரட்சிகர விடுதலைகள் என்ற ஹெய்திய மக்களின் சரித்திரத்திலிருந்து ஒரு பகுதி, வாசித்தது. "மழையின் பெருந்துளிகள், கருத்த மேகங்கள் கொண்ட வானிலிருந்து, மரங்களின்

கிழிந்த இலைகளின் மீதும், வூடு ( சூன்யம்) மேள தாளதிற்கு ஏற்ப மெதுவாக நடனமாடிக்கொண்டிருந்த குழுவினர் மீதும் பொழிந்துகொண்டிருந்தன." ஹெய்தியர், போய்ஸ் கேய்மன் ( Bois Caiman) உடைய கதையை அவர்களின் விடுதலையின் ஒரு பகுதியாக போற்றி வந்தனர். இன்று அனைத்து ஹெய்தியர்களும் கிருஸ்தவர்களே, அவர்களுடைய ஆப்பிரிக்க சந்ததியினரின் பூர்வீக மதத்தின் தழுவலாக, அதில் பாதிப்பேர் சூனியத்தை கடைபிடிக்கின்றனர்.

அவனுடைய குறுகிய தீங்கிழைக்கும் வழியில் 'ராபர்ட்சன்' முதல் கட்டளையின் (First Commandment) வாதத்தை வைக்கிறான்: இஸ்ராயிலின் இறைவன் மலை உச்சியிலிருந்து "நீங்கள் என்னைத்தவிற வேறு இறைவனை கொள்ளக்கூடாது," என கர்ஜிக்கும் பொழுது, அதை அவன் அந்தப்பொருளில் தான் கூறுகிறான். இந்த இறைவன், பேரழிவுகள் - வெள்ளங்கள் ஆகியவற்றை அவனை அடிபணியாதவர் மீது பொழிகிறான்.

ஆனால் ராபர்ட்சன் உடைய கருத்து, அடிப்படைவாத கருத்தாகும். இது மிகவும் கொடூரமானதும் சுய நீதியுடையதும் - அகஸ்டினிலிருந்து எலி வீசெல் (Augustine to Elie Wiesel) வரையுள்ள சிந்தனையாளர்களின் இறையியல் சொற்பொழிவிற்கு எதிராக செவிடு, குருடு மற்றும் ஊமை எனவும் - பிற்படுத்தப்பட்டது எனவும் அழைக்கப்படலாம். ஒவ்வொரு மேற்கத்திய மதத்தின் மரபும் மனிதன் மற்றவனுடைய பாவங்களை எண்ணவும், மதிப்பிடவும் செய்ய வழியில்லை என்பதை கற்றுக்கொடுக்கின்றன. " ஹெய்தியர்கள் பாவிகளாக இருந்து அது அவர்களுக்கு நேர்ந்திருந்தால், அது தனக்கு ஏன் நேரவில்லை?" பார்ட் எற்மேன் ( Bart Ehrman) என்ற சேபல் ஹில், (Chapel Hill) வட கரோலினா பல்கலைக்கழகத்தின் ஒரு பைபில் அறிஞர், கோபத்துடன் மறுக்கின்றார்.

"நான் நினைக்கின்றேன்", ராபி ஹரோல்ட் குஷ்னெர், "நல்லவர்களுக்கு ஏன் கெட்டது நடக்கின்றது" என்ற புத்தகத்தின் ஆசிரியர் சேர்த்துரைக்கின்றார், "நீ இறைவனின் மனதை படிக்க முடியும் என நினைப்பது ஒரு தலையாய இறுமாப்பாகும்."

அடுத்த வாரம் முழுக்க, விவேகமான மத குருக்கள் என்ன சொல்வதென்று போராடுவர். "அவர்கள் உண்மையில் சாமர்த்தியமானவர்களே." எற்மேன் கூறுகிறார், "இறைவன் புதிரானவன், நாம் அனைத்தையும் விளக்க முடியாது, என கூறுவர்." மற்றவர், நில நடுக்கம் சாத்தானின் வேலை என கற்பிப்பர், அல்லது நம்பிக்கையுள்ளோர், இவ்விடுக்கண்ணில் ஆசி பெறுவர், ஏனெனில், இறந்தவர் முடிவில் அமைதி பெற்று இளைப்பாறுவர், என்றும் கற்பிப்பர். சென்ற வாரம் ஒரு ரோமன் கத்தோலிக்க பதிவர் ( Blogger) எழுதினார், "இருப்பதெல்லம் இந்த உலகமட்டுமில்லை."

இயற்கை பேரழிவுகள் எப்படியோ அன்பு செலுத்தும் இறைவனின் வரம்புக்கு வெளியில் இருப்பதாக ராபி குஷ்னெர் கற்பிக்கிறார். அநியாயமான மற்றும் விவரிக்க

முடியாத துன்பங்களை எதிர் கொள்கையில், பின்பு, விசுவாசமாக இருக்கவேண்டியதும் - மற்றும் துன்பங்கள் நீங்க உதவுவதும் - விசுவாசிகளின் பொறுப்பு. " இறைவனின் விருப்பம், " குஷ்னெர் கூறுகிறார், பேரழிவுகளை நமக்கு அனுப்புவதல்ல, ஆனால், அவைகளின் மீது நாம் வெற்றிகொள்ள அனுப்புவது தான். இங்கு தான், தற்செயலாக அநேக அறிஞர்கள் ஜோபைப்பற்றி ( அய்யூப் அலைஹிஸ்ஸலாம்) நிறுத்தி விடுகிறார்கள். " புதிரான இறைவனின் முன் வாழ்ந்த பக்தியான வாழ்க்கையின் ஆழத்தில் ஒரு தீர்மானம் கிடைக்கப்பெறவிருக்கிறது," என்பது புதிய ஆக்ஸ்ஃபோர்ட் பைபில் விரிவுரையில் ஒரு வர்ணனையின் வாசிப்பாக உள்ளது.

ஒரு நாத்திகனின் கருவிகலப்பெட்டியில் (kit) இருக்கும் மிக சக்திவாய்ந்த கருவி தான் இறையியலாற்றல், (theodicy) இருப்பினும், விசுவாசிகளில் பலர் அப்பாவிகளின் துன்பங்களின் பொருட்டு, இறைவனிலிருந்து விலகி விட்டனர். எற்மேன் விலகி விட்டார். வாழ்நாள் முழுக்க ஒரு கிறுஸ்தவனாக இருந்து, "எனக்கு ஒரு கருத்து கிடைத்துள்ளது, ஒரு சக்திவாய்ந்த மற்றும் அன்பு செலுத்தும் இறைவன் உலகத்தின் பொறுப்பாளனாக இருந்திருந்தால், அங்கே ஏதோ இந்த மாதிரி எப்படி நடக்கக்கூடும் என்று என்னால் விளக்க முடியவில்லை. இது நிறைய பதில்களைக்கொண்ட ஒரு மிகப்பழைய பிரச்சினை, ஆனால் எதையும் பொருத்தமானதாக நான் நினைக்கவில்லை. அப்படியிருந்தும், நாம் சதகா ( tzedakah) செய்யவும், பிரார்த்தனையையும் தொடருவோம்.

---

# ?????????? ??? ???????????

# Why sufferings happen

**By:** ????? ?????

---

அன்புள்ள பேஸ்டர்,

நியூஸ்வீக் பத்திரிகையில் வெளியான உங்கள் கட்டுரையையும் இதர துணுக்குகளையும் அனுப்பியதற்கு மிக்க நன்றி. அவைகளை அனுபவித்து படித்தேன். நான் இங்கே உலகத்தில் நிகழும் இயற்கை அழிவுகள் அதன் காரண விளைவுகள், பாதிப்புகளுடன் நடக்கும் இன்ப துன்ப நிகழ்சிகள், ஆகியவற்றை இஸ்லாமிய கூற்றின்படி புரிந்து கொள்ள சில கருத்துக்களை எழுதுகிறேன். என் கூற்றுத்தொகுப்பு, இஸ்லாம் இவைகளை காணும் கண்ணோட்டத்தை புரிந்து கொள்ளத்தானே தவிர உங்கள் கருத்துக்களை மறுத்து அவைகளை விலக்கிவிடுவதற்காக அல்ல. ஆகவே, என்னுடன் பொருத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

“பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே ஏட்டில் (Lauh Al-Mahfooz) இல்லாமலில்லை; நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்.” (அல்-குர்ஆன் : 57:22).

"அன்றியும் தீங்கு வந்து உங்களை அடைவதெல்லாம் , அது உங்கள் கரங்கள் சம்பாதித்த (காரணத்)தால் தாம் , எனினும், பெரும்பாலானவற்றை அவன் மன்னித்தருள்கின்றான்." (அல்-குர்ஆன் : 42:30)

"மனிதர்களை அவர்கள் சம்பாதித்த ( தீ) வினைக்காக அல்லாஹ் அவர்களை (உடனுக்குடன்) பிடி(த்துத் தண்டி)ப்பதாக இருந்தால் பூமியில் உயிர்ப் பிராணிகள் ஒன்றையுமே விட்டு வைக்கமாட்டான்; ஆயினும், ஒரு குறிப்பிட்ட தவணைவரை அவர்களைப் ( பிடிக்காது) பிற்படுத்துகிறான்; அவர்களுடைய தவணை வந்துவிட்டால் நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குபவனாகவே இருக்கின்றான்." (அல்-குர்ஆன் : 35:45).

அல்-குர்'ஆன் 57:22 & 42:30 ஆகிய வசனங்களில் கூறியிருப்பதாவது: அழிவுச் சம்பவங்கள் எங்களிலோ அல்லது, உலகத்திலோ சம்பவிக்கும் முன்கூட்டியே

அவைகள் Lauhe Mahfooz என்ற ஒரு ஏட்டில் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவைகள் உண்டாவதற்கு காரணமே நாம் தான்.

அதாவது, துரதிர்ஷ்டத்தை மனிதன் தனக்கு தன் கையாலேயே சம்பாதிக்கிறான். மனிதன் முட்டாள்தனமாக இதைச்செய்வான் அதனால் இந்த விபத்துகள் சம்பவிக்கும் என ஒரு புத்தகத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சம்பவங்களை அல்லாஹ் நிகழச்செய்வான். அது அவனுக்கு மிக சுலபம். இந்த கருத்தை மற்ற வார்த்தைகளால் புரிந்து கொள்ள, சிறிது ஆராய்வோம்:

பாடம் கற்பிக்கும் ஒரு ஆசிரியர், ஒரு மாணவன் பரிட்சையில் தேரமாட்டான் என முன்கூட்டியே அறிவிப்பது: உதாரணத்திற்கு, குறும்புள்ள ஒரு மாணவன், படிப்பில் அக்கறையில்லாதவன், வீட்டுப்பாடங்களை ஒப்பிக்காதவன் இறுதிப்பரிட்சையில் தேரமாட்டான் என ஒரு ஆசிரியர் முன் கூட்டியே கூறி, அந்த மாணவன், பரிட்சை எழுதி அவ்வாறே தேராமல் போனால், யாரைப்பழிப்பது, ஆசிரியரையா, அல்லது மாணவனையா? ஆசிரியர், மாணவனைப்பற்றி அறிந்திருந்து, அவன் தேரமாட்டான் என கூறியது, மாணவன் தேராமல் போனதற்கு காரணமாகாது. தன் தோல்விக்கு மாணவனே பொறுப்பாவான். அதே போல், அல்லாஹ்வும் முன்கூட்டியே பலர் நம்பிக்கையை நிராகரித்துவிடுவர் என்பதை அறிவான், ஆகவே அல்லாஹ் அவர் இதயங்கள் முத்திரையால் அடைத்துவிட்டான்.

அல்லாஹ் ஒவ்வொரு காரண காரியத்திற்கும் (cause and effect) அதாவது ஒவ்வொரு செய்கைக்கும் ஒரு விளைவை உண்டாக்கியுள்ளான். இயற்கை பேரழிவுகளான நில நடுக்கம், வெள்ளம் ஆகியவை இறைவன் செயலாக இருப்பினும், அநேக நேரங்களில் ஒரு துரதிர்ஷ்டம், ஒரு இன்னல் ஒருவருடைய சுய சம்பாத்தியமாக இருக்கிறது. பூகோள வெப்பம், காடுகளின் அழிப்பு, பூமிக்கடியிலும் ஆழ்கடலிலும் அணுகுண்டு பரிசோதனைகள், பாதிக்கப்பட்ட வளி மண்டலத்தின் ஓசோன் படலம் ஆகியவைகளால் மனிதன் உலகத்தின் மீது ஏற்கனவே மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கிவிட்டான்.

உலகில் ஏன் வேதனையும் துன்பமும் குடிகொண்டுள்ளது என்ற கேள்வி எழுகிறது. நாம் நோய், முதுமை மற்றும் இறப்பை இவ்வுலகில் காண்கிறோம். நாம் அழகற்ற அசிங்கமானவற்றையும், மன நிலை பாதிக்கப்பட்ட, முட்டாளான மக்களையும் இங்கே பார்க்கின்றோம். புயல்கள், பூகம்பங்கள், வெள்ளங்கள், வரட்சி மற்றும் பஞ்சங்களை காண்கின்றோம். நாம் மக்கள் பாவங்கள் செய்வதையும், பலர் பேராசையுள்ளவர்களாக இருப்பதையும் அவர்களின் பணிவின்மை, விசுவாசமற்ற போக்கு, மற்றும் நேர்மையற்ற தன்மை ஆகியவற்றையும் காண்கின்றோம். நாம் மக்கள் பலாத்காரம் செய்வதையும், கொலைகள் புரிவதையும், தமக்குள் சண்டையிட்டு போர் புரிவதையும் பார்க்கின்றோம். இதுவும் இதற்கு மேலான பிரச்சினைகளை நாம் அறிவோம். ஆக, இவ்வுலகில் மனிதனால் இழைக்கப்பட்ட தீய செயல்களும்,

இயற்கை பேரழிவுகளும் இருக்கின்றன. தனிப்பட்டவருடைய வேதனையும் உண்டு, அத்துடன், பரந்த அளவிலான பாதிப்புகளும் உண்டு.

ஆனால், இது மட்டும் முழுக்கதையல்ல என்பதையும் நாம் அறிவோம். இந்த எதிர்மறை நிகழ்ச்சிகளுடன், நாம் அழகையும் அனுபவிக்கிறோம், ஆரோக்கியம், செழிப்பு, வாழ்க்கை, பிறப்பு, அறிவு, நுண்ணறிவு, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவைகளையும் நிச்சயமாக காண்கின்றோம். மக்களிடையே நற்குணம் இருப்பதை நாம் காண்கிறோம், அத்துடன், நாணயம், நம்பிக்கை, கண்ணியம், தர்மம், தொண்டு செய்யும் ஆர்வம், அன்பு, தியாக மனப்பான்மை இருப்பதையும் நாம் மறுக்க முடியாது. நிறைய புண்ணியமும் பக்தியும் குடிகொண்டுள்ளதையும் நாம் காண்கிறோம். ஆக, நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டும் கண்டு, மறு பக்கத்தை புறகணிப்பது தப்பில்லையா? படைப்பின் ஒரு அம்சத்தின் மீது மட்டும் கவனம் செலுத்தி மறு பக்கத்தை புறக்கணிக்கும் எந்த தத்துவமும் பகுதியாகத்தான் உண்மையுள்ளதாக இருக்க முடியும். . பகுதியளவு உண்மையானது, முழு உண்மைக்கும் சத்தியத்திற்கும் சமம் ஆகாது.

ஒரு படைப்பில் நன்மையின் தனிமம் தீய தனிமத்தை விட அதிகமாக இருப்பது உண்மையே. நோயாளிகளை விட ஆரோக்கியமாக இருப்பவர்களே அதிகமாக இருப்பதை நாம் அனைவரும் காண்கிறோம். பட்டிணி கிடப்பவர்களைவிட வயிறு நிறைய உண்பவர்களே அதிகம். குற்றம் புரிபவர்களை விட ஒழுக்கமான வாழ்க்கை வாழ்பவர்களே அதிகம். நன்மையும் நற்குணமும் ஆளும் பொழுது, அதற்கு தீமை ஒரு விதிவிலக்கு. புண்ணியம் ஒரு நெறிமுறை எனில் பாவம் ஒரு மனச்சிதைவில் இயக்கப் பிழற்ச்சியாக உள்ளது. பொதுவாக, கனிவாக வீசும் தென்றலில் மரங்கள் காய்க்கின்றன, பூக்கள் மலர்கின்றன, வானம் பொழிகிறது, பூமி விளைகிறது.

இவையெல்லாம் இருப்பினும், அல்லாஹ் ஏன் விதிமுறைகளுக்கு விதிவிலக்குகளை அனுமதித்துள்ளான்?

தனது படைப்பில் அல்லாஹ்வின் வழிமுறைகளை அறிந்துகொள்ள நாம் இந்த கேள்வியை கேட்போம். உலகத்தில் நல்ல, தீய அல்லது எது வேண்டுமானாலும் சம்பவிப்பது அல்லாஹ்வின் விருப்பப்படி தான் ( மஷி'அத் அல்லாஹ்) என அல்-குர்ஆன் கூறுகிறது. அல்லாஹ்வுடைய விருப்பத்தை மொத்தத்தில் அவனே அறிவான். அனைத்து வகையிலும் வரையறுக்கப்பட்ட நாம் அவனுடைய எல்லையற்ற விருப்பத்தையும் அறிவையும், முழுவதுமாக விளங்கிக்கொள்ள இயலாது. அவன் தன் பிரபஞ்சத்தை அவன் பொருத்தமாக கருதும் விதத்தில் நடாத்துகின்றான். அல்லாஹ் ஞானம் மிக்கவன், மேலும் அல்லாஹ் செய்யும் அனைத்தும் சரியானது, நல்லது, நியாயமானது, என அல்-குர்ஆன் நம்மை போதிக்கிறது. நாம் அவனுடைய விருப்பத்திற்கு இணங்கி நம்மை சமர்பித்து,

சரணடைய வேண்டும். அல்லாஹ்வின் அனைத்து விருப்பத்தின் விவரங்களையும் அல்-குர்ஆன் நமக்கு வழங்கவில்லை. ஆனால், நமக்கு தேவையான, போதுமான, மற்றும் உபயோகமான வழிமுறைகளை தெளிவுபடுத்தியுள்ளது. இவ்விஷயத்தை அறிந்துகொள்ள நாம் மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய பல கருத்துக்கள் உள்ளன:

1. ஆரம்பத்திலேயே சொல்லப்போனால், அல்லாஹ் இந்த உலகத்தை நிரந்தரமாக இருக்கவேண்டி படைக்கவில்லை. இது ஒரு தற்காலிக உலகமே, இதில் இருக்கும் அனைத்துக்கும் காலம், நேரம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் நேரம் முடிவுறும் பொழுது, அது இறந்து விடுகிறது, ஒரு முடிவுக்கு வந்து, அழிக்கப்பட்டுவிடுகிறது. நல்லவைகளும் இவ்வுலகில் நிலைப்பதில்லை, கெட்டவையும் நித்தியமாக இருப்பதில்லை. நாம் இங்கே ஒரு குறுகிய காலத்திற்காக மட்டும் தங்குவதுடன் அனைவரும் சோதிக்கப்படுகிறோம். இச்சோதனையில் தேருபவருக்கு ஒரு நிலையான நித்திய மறுவாழ்வுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வில் தோல்வியுற்றோர், தன் பாவங்களின் விளைவையும் ஊழல்களின் பலனையும் அனுபவிப்பர், நித்தியமாக, நிச்சியமாக.

2. அல்லாஹ் நமது பிரபஞ்சத்தில் இரு சட்டங்களை, விதிமுறைகளை வைத்துள்ளான். அதில் ஒன்று இயற்பியல் சட்டமும் ( Physical Law) மற்றொன்று தார்மீக சட்டமும் ( Moral Law). இச்சட்டங்கள் அல்லது விதிமுறைகள் மீறப்படும் பொழுதும், உடைத்தெறியப்படும் பொழுதும் அல்லாஹ் துன்பங்களும் வேதனைகளும் நேர அனுமதிக்கின்றான். இயற்பியல் சட்டம் காரண காரிய விளைவின் ( Cause and Effect) அடிப்படையில் இயங்குகிறது. அதாவது, ஒருவன் ஆரோக்கியத்தை பேணி பாதுகாக்காமல், நோய் தொற்றுகளுக்கு இலக்காகிவிட்டால், அவனை வியாதிகள் பற்றிக்கொள்ளும். ஒருவன் தன் வாகனத்தை விழிப்புடன் நடாத்தவில்லை என்றாலும், அதை கவலையற்ற போக்கில் அளவுக்கு மீறிய வேகத்தில் ஓட்டினாலும், அல்லது வாகனத்தை சரியாக பராமரிக்காமல் இருந்தாலும், அல்லது, சாலைகள், பொது வழிகள், அவசியமான சரியான முறையில் அமைக்கப்படாமலிருந்தாலும், அல்லது போக்குவரத்து விதிமுறைகள் சரியாக கடைபிடிக்காமலோ, அமலாக்கப்படாமலோ இருந்தாலும், அவ்வப்போது விபத்துகள் நடந்துகொண்டேயிருக்கும். காரண காரிய விளைவுகளின் ஆய்வு (study of cause and effect) பாதுகாப்பு வசதிகளுக்கு மிக முக்கியமானதாகும். இருப்பினும், நாம் மனதில் கொள்ளவேண்டியது யாதெனில், அல்லாஹ் பல தடவை எங்களை நமது ஒவ்வொரு கவனக்குறையிலும் நாம் பாதிக்கப்படாமல் இருக்க இந்த விபத்துகளிலிருந்து பாதுகாத்துவிடுகிறான். நாம் மிக கவனக்குறைவாக இருந்த போதிலும் எத்தனை தடவை ஸ்தலத்திற்கு பாதுகாப்பாக போய் சேர்ந்திருக்கிறோம்! நகரங்களில் மக்கள் வாகனங்களை ஓட்டும் அழகை சிந்தித்தோமானால், விபத்துகள் நடவாமல் இருப்பதும் மக்கள் சேதப்படாமல் இருப்பதும் ஒரு அற்புதம் தான். அல்லாஹ் கூறுகின்றான்:

> “அளவற்ற அருளாளன், இக் குர்ஆனை ( அவன்தான்) கற்றுக் கொடுத்தான். அவனே மனிதனைப் படைத்தான். அவனே மனிதனுக்கு (பேச்சு) விளக்கத்தையும் கற்றுக் கொடுத்தான். சூரியனும் சந்திரனும் (அவற்றிற்கு நிர்ணயிக்கப் பெற்ற) கணக்கின்படியே இருக்கின்றன. (கிளைகளில்லாச்) செடி கொடிகளும், (கொப்புங் கிளையுமாக வளரும்) மரங்களும் - ( யாவும்) அவனுக்கு ஸுஜூது செய்கின்றன. மேலும், வானம் - அவனே அதை உயர்த்தித் தராசையும் ஏற்படுத்தினான். நீங்கள் நிறுப்பதில் வரம்பு மீறாது இருப்பதற்காக. ஆகவே, நீங்கள் நிறுப்பதை சரியாக நிலை நிறுத்துங்கள்; எடையைக் குறைக்காதீர்கள். இன்னும், பூமியை - படைப்பினங்களுக்காக அவனே விரித்தமைத்தான். (ஸூரா அர்-ரஹ்மான் : 55: 1-10)”

அல்லாஹ் வகுத்து அமைத்த அளவுகோலை நாம் மீறிப்போவதும், அவனால் பிரகடணம் செய்யப்பட்ட காரண காரிய விளைவுகளின் சட்டத்தை மீறி அதை உடைத்தெறிவதும் நம்பமுடியாததாக உள்ளது. உண்மையில் அல்லாஹ்வின் கருணையால் தான் நாம் பாதுகாக்கப்படுகிறோம். கண்டிப்பாக சொல்லப்போனால், அல்லாஹ் ஏன் துன்பங்களையும் வேதனையையும் அனுமதிக்கின்றான் என்று கேள்வி கேட்பதைவிட, எங்கள் அலட்சியம், புறக்கணிப்பு மற்றும் அத்துமீறல்கள் இருந்த போதிலும், எவ்வளவு தூரம் அல்லாஹ் எங்களை மன்னித்து பாதுகாக்கின்றான் என்பது தான் எங்கள் கேள்வியாக இருக்கவேண்டும். அல்-குர்ஆன் கூறுகிறது:

> "மனிதர்களை அவர்கள் சம்பாதித்த ( தீ) வினைக்காக அல்லாஹ் அவர்களை (உடனுக்குடன்) பிடி(த்துத் தண்டி)ப்பதாக இருந்தால் பூமியில் உயிர்ப் பிராணிகள் ஒன்றையுமே விட்டு வைக்கமாட்டான்; ஆயினும், ஒரு குறிப்பிட்ட தவணைவரை அவர்களைப் ( பிடிக்காது) பிற்படுத்துகிறான்; அவர்களுடைய தவணை வந்துவிட்டால் நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குபவனாகவே இருக்கின்றான்." (ஸூரா ஃபாத்திர் - 35:45)

ஆனால், சில நேரம் அல்லாஹ் தன்னுடைய இயற்பியல் அல்லது தார்மீக சட்டங்களில் எதுவாகிலும் மீறுவோரை தண்டிப்பதுண்டு. பல நாடுகள் மற்றும் சமூகங்கள், அவர்களின் பாவ வாழ்க்கைமுறையின் பொருட்டு அழிக்கப்பட்டுவிட்டதாக அல்-குர்ஆன் கூறுகிறது.

"(நபியே!) இவர்கள் உம்மைப் பொய்யாக்க முற்பட்டால் ( அதற்காக விசனப்படாதீர்; ஏனெனில்) நிச்சயமாக இவர்களுக்கு முன்னால் நூஹுடைய சமூகத்தினரும்; ஆது, ஸமூது ( சமூகத்தினரும் தத்தம் நபிமார்களைப்) பொய்ப்பிக்கவே முற்பட்டார்கள். ( இவ்வாறே) இப்றாஹீமுடைய சமூகத்தினரும் லூத்துடைய சமூகத்தினரும் (பொய்ப்பிக்கவே முற்பட்டார்கள்). ( இவ்வாறே) மத்யன் வாசிகளும் (முற்பட்டனர்); இன்னும் மூஸாவையும் பொய்ப்பிக்கவே முற்பட்டனர் - எனினும் நான் காஃபிர்களுக்கு அவகாசம் கொடுத்துப் பின்னர் அவர்களை நான் பிடித்துக் கொண்டேன்; என் தண்டனை எப்படியிருந்தது? (என்பதை கவனிப்பீராக!) அநியாயம் செய்த எத்தனையோ ஊ(ரா)ர்களை நாம் அழித்திருக்கிறோம் - அவற்றின் முகடுகள் மீது அவை விழுந்து கிடக்கின்றன; எத்தனையோ கிணறுகள் பாழடைந்து கிடக்கின்றன; எத்தனையோ வலுவான மாளிகைகள் (பாழ்பட்டுக் கிடக்கின்றன)." (ஸூராஹ் : அல்-ஹஜ் 42 - 45)

3. வேதனைகளும் துன்பங்களும் சில பேருக்கு ஒரு சோதனையாகவும், தேர்வாகும் இருக்கலாம். சிலருடைய பொறுமை மற்றும் மன உறுதியை சோதிக்க அவர்கள் துன்பப்படவும் வேதனைகளுக்குள்ளாகவும் அனுமதிக்கின்றான். அல்லாஹ்வின் தூதர்களும், தீர்க்கதரிசிகளும் துன்பத்திற்குட்படுத்தப்பட்டனர். தூதர் அயூப் ( அலைஹிஸ்ஸலாம்) மிகவும் பொறுமைசாலி என அல்-குர்ஆன் பாராட்டுகிறது. நல்லவர்கள் கூட சில நேரம் துன்பப்படுகின்றனர். ஆனால், அவருடைய வேதனைகள் மற்றவரை துன்பத்திலிருந்து மீட்டெடுத்து சமூகத்திற்கு நல்லதை அளிக்கின்றன. மக்கள் அதனால் நல்ல உதாரணங்களை கற்கின்றனர். தியாகிகள் தன் நம்பிக்கைக்காகவும், கொள்கைக்காகவும் பலியாகின்றனர். போராளிகள் தன் நாட்டிற்கும், மக்களுக்கும் விடுதலையும் சுதந்திரமும் உண்டாக உயிர் தியாகம் செய்கின்றனர்.

4. அல்லாஹ் மற்றவரை சோதிக்க சிலரை துன்பம் பெற அனுமதிக்கின்றான். துன்பப்படுபவனை மற்றவர் எவ்வாறு நடத்துகின்றனர், அவர்களின் பிரதிபலிப்பு என்ன என்ற சோதனை. ஒரு நோயாளியையோ அல்லது ஏழையையோ எதிர் கொண்டால், நீங்கள் சோதனைக்குள் இருப்பதாக பொருள். அல்லாஹ் துன்பப்படுபவருடன் இருக்கின்றான், உங்கள், விசுவாசத்தையும், தர்ம, தான, தொண்டு மனப்பான்மையையும் சோதிக்க. ஒரு ஹதீஸ் குதுஸியில், அல்லாஹ்வின் தூதர் ( Sallallahu alaihi vasallam) கூறியதின் சுருக்கம் :

தீர்ப்பு நாளில் அல்லாஹ் கூறுவான், " ஓஹ் ஆதம் உடைய மகனே, நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன், நீ என்னை பார்க்க வரவில்லை. அவன் கூறுவான், "ஓஹ் என் இறைவா, நீ அகிலங்களின் இறைவனாக இருக்கும்பொழுது, நான் எப்படி உன்னிடம் வருகை தர இயலும்." அல்லாஹ் கூறுவான், "என் அடிமை இன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தது உனக்கு தெரியாதா, நீ அவனிடம் வரவில்லையே." நீ வந்திருந்தால் அங்கே என்னை கண்டிருப்பாய் என்று உனக்கு தெரியாதா?" அல்லாஹ் கூறுவான், "ஓஹ் ஆதம் உடைய மகனே, நான் உணவு கேட்டேன், நீ எனக்கு ஊட்டவில்லை." அவன் கூறுவான், "ஓஹ் என் இறைவா, நான் எப்படி உன்னை ஊட்ட இயலும், நீயோ அகிலங்களின் இறைவனாயிற்றே?" அல்லாஹ் கூறுவான், "என் அடிமைகளில் இன்னாருக்கு உணவு தேவைப்பட்டது உனக்கு தெரியாதா, நீ அவனை ஊட்டவில்லையே? நீ அவனை ஊட்டியிருந்தால், அது எனக்காக என உனக்கு தெரியாதா?" "ஓஹ் ஆதம் உடைய மகனே, நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன், ஆனால், நீ எனக்கு குடிக்க கொடுக்கவில்லை." அவன் கூறுவான், "நீ அகிலங்களின் இறைவனாக இருக்கும் பொழுது, நான் உனக்கு எப்படி நீர் கொடுத்திருக்க முடியும்?" அல்லாஹ் கூறுவான், "என் அடிமை இன்னார், உன்னிடம் குடிக்க தண்ணீர் கேட்டான், நீ அவனுக்கு குடிக்க தண்ணீர் கொடுக்கவில்லை. அவனுக்கு குடிக்க தண்ணீர் கொடுத்திருந்தால், அது எனக்காக இருந்திருக்கும் என உனக்கு தெரியாதா?" (முஸ்லிம் - ஹதீஸ் நெ:4661)

இறைத்தூதர் ஈஸா (Jesus) (அலைஹிஸ்ஸலாம்), இதே போன்று சில விஷயங்களை கூறியதாக சொல்லப்படுகிறது, (Mathew - மத்தேயு 25: 34 - 46 பார்க்க):

34. பிறகு வலது பக்கமுள்ளவர்களை நோக்கி அரசர் கூறுவார், வாருங்கள், என் பிதாவால் ஆசி பெற்றவர்களே, உலக அஸ்திவாரத்திலிருந்து உங்களுக்காக தயாரித்துள்ள ராஜ்ஜியத்தை சுவாதீனம் செய்துகொள்ளுங்கள்:

35. நான் பசியாக இருந்தேன், நீங்கள் எனக்கு இறைச்சி கொடுத்ததற்காக: நான் தாகத்துடன் இருந்தேன், நீங்கள் எனக்கு அருந்த கொடுத்தீர்: நான் அன்னியனாக இருந்தேன், நீங்கள் எனக்கு இடம் கொடுத்தீர்.

36. நிர்வாணமாக இருந்த என்னை, உடுத்திவிட்டீர்: நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன், நீங்கள் என்னை காண வந்தீர், நான் சிறையிலிருந்தேன், நீங்கள் என்னிடம் வந்தீர்.

37. பிறகு வலது பக்கத்தவர் பதிலளிப்பர், இறைவா, நாம் உன்னை எப்பொழுது பசியாக கண்டு ஊட்டிவிட்டோம்? அல்லது தாகத்துடன் கண்டு, அருந்த கொடுத்தோம்?

38. நாம் உன்னை எப்பொழுது அன்னியனாக கண்டு, உள் அனுமதித்தோம்? அல்லது நிர்வாணமாக கண்டு, உன்னை உடுத்திவிட்டோம்?

39. அல்லது, நாம் எப்பொழுது நீ நோய்வாய்ப்பட்டதையோ, சிறையிலிருந்ததையோ கண்டு உன்னிடம் வந்தோம்?

40. அரசர் அவர்களுக்கு பதிலளிப்பார், "மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்கிறேன், என் சகோதரர்களில் ஒருவனுக்கு நீங்கள் குறைந்த பட்சம் எவ்வளவு செய்திருந்தாலும், அது நீங்கள் எனக்காக செய்தீர்.

41. பிறகு இடது கைப்பக்கத்தவருக்கு அவர் கூறுவார், சபிக்கப்பட்டவர்களே, நீங்கள் என்னிடமிருந்து விலகிவிடுங்கள், , பிசாசுக்காகவும் அவன் சிஷ்யர்களுக்ககவும் உண்டாக்கப்பட்ட என்றும் தொடர்ந்திருக்கும் தீயில்:

42. நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு இறைச்சி கொடுக்காததற்காக: நான் தாகமாய் இருந்தேன், நீங்கள் எனக்கு அருந்த கொடுக்கவில்லை:

43. நான் அன்னியனாக இருந்தேன், நீங்கள் என்னை உள் அனுமதிக்கவில்லை: நிர்வாணமாக இருந்தேன், என்னை உடுத்திவிடவில்லை: நோய் பீடித்து, சிறையிலிருந்தேன், நீங்கள் என்னிடம் வரவில்லை.

44. பிறகு அவர்களும் அவருக்கு பதிலளிப்பர், இறைவா, நாம் உன்னை எப்பொழுது, பசியாக அல்லது, தாகத்துடன், அல்லது அன்னியனாக, அல்லது நிர்வாணமாக, அல்லது நோயாளியாக, அல்லது சிறையில் இருந்ததை கண்டு உன்னை உபசரிக்க வரவில்லை?

45. பிறகு அவர் பதிலளிப்பார், "மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்கிறேன், என் சகோதரர்களில் ஒருவனுக்கு நீங்கள் குறைந்த பட்சம் எவ்வளவு செய்யாதிருந்தாலும், அது நீங்கள் எனக்காக செய்ததில்லை.

46. இவர்கள் என்றும் தொடர்ந்திருக்கும் தண்டனையில் இருப்பர், ஆனால், நன்னெறியினர் நித்திய வாழ்க்கையில் இருப்பர்.

சுருக்கமாக கூறினால், துன்பங்களும் வேதனைகளும், அல்லாஹ்வின் இயற்கை மற்றும் தார்மீக சட்ட திட்டங்களை நாங்கள் கடைபிடிக்க வேண்டும் என கற்றுக்கொடுக்கின்றன. இவை சில நேரம் அல்லாஹ்வின் இயற்கை மற்றும் தார்மீக சட்டங்களை மீறுபவர்களை தண்டிக்கவும் உண்டாகின்றன. இவை அல்லாஹ்வின் மீது நமது நம்பிக்கையை சோதிக்கவும், நமது மனிதாபிமானத்தையும், தான தர்மத்தை சோதிக்கவும் உண்டாகின்றன. துன்ப வேதனைகளை நாம் எதிர்கொள்ளும் பொழுதெல்லாம், எங்களையே வினாவிக்கொள்ளவேண்டியது யாதெனில், "நாம் அல்லாஹ்வின் சட்ட திட்டங்களை அத்துமீறி உடைத்திருக்கிறோமா?" என்பது தான். - அப்படியிருந்தால், பிரச்சினையின் காரணத்தை ஆராய்ந்து, அதை சரிகட்டும் முறைகளை கடைபிடிப்போம். " இது ஒரு தண்டனையாக இருக்குமோ?" - அப்படியானால், மனந்திருந்த வருந்தி, மன்னிப்புக்கேட்டு, நம் வழிமுறைகளை சீர்திருத்திக்கொள்வோம். " இவை, நமக்கு ஒரு சோதனை, அல்லது ஒரு தேர்வாக இருக்குமோ?" - இந்த பரிட்சையில் வெற்றி காண கடுமையாக உழைப்போம்.

ஈமான் ( நம்பிக்கை) கொண்டோர் தொழுகை ( பிரார்த்தனை), மன திருப்பம், நற்செயல்கள் ஆகியவைகளால் துன்ப வேதனைகளை எதிர்கொள்வர். நம்பிக்கையற்றோர் துன்ப வேதனைகளை, சந்தேகத்தாலும், குழப்பத்தாலும் எதிர்கொண்டு, அல்லாஹ்வை பழித்து, அவனுடன் விவாதங்களும் வாக்குவாதமும் நடத்துவர்.

நம்பிக்கைப் புன்னகையுடன்

நயீம் சையத்

---